# புலமைக்கதிர்

5

புதிய பாடத்திட்டம் - 2020

**தாய்மொழி** **நேரம்:- 01.00மணி**

**01. பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

மலையில் வந்து முகில்கள் கூட
வண்ண மயிலும் ஆடுது
அழகுத் தோகை விரித்து நின்றே
ஆனந்தமாய் ஆடுது

கோலமயிலின் கூத்தைக் கண்டு
குரங்கு தாளம் போடுது
கொப்புக் கொப்பாய்த் தாவிப் பாய்ந்து
குரங்கு தாளம் போடுது.

1. இப்பாடலில் விபரிக்கப்படும் காட்சி எது?

   ..........................................................................................................

2. பின்வரும் சொற்களின் ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக?

   கவி ........................................................
   வடிவு ........................................................
   சந்தோசமாய் ........................................................
   மேகங்கள் ........................................................

3. இப்பாடலில் வரும் அடைமொழிகள் இரண்டு எழுதுக?

   ................................................................ , ...............................................................

4. இப்பாடலில் வரும் இணைமொழியை எழுதுக?

   ....................................................................................

5. இப்பாடலில் வரும் பிராணிகள் எவை?

   ................................................................ , ................................................................

6. முகில்கள் எங்கே கூடுகின்றன?

   ....................................................................................

7. மயிலின் கூத்தைக் கண்டு தாளம் போடுவது எது?

   ....................................................................................

8. பின்வருவனவற்றின் தொனியைக் குறிப்பிடுக?

   1. மயில் ...................................... 2. குரங்கு...................................................

திரு. க. சந்திரகுமார் . --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

**02. பின்வரும் நிகழ்வை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக?**

ஒரு நாள் காலை எனது நண்பன் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தான். அப்போது அவனது அம்மாவும் தங்கையும் கடைக்குச் செல்லப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அவன் ''விரைவாக வந்து விடுங்கள்'' ''பத்திரிக்கையில் மழை பெய்யும் என்று போட்டிருக்கிறது.'' என்று பத்திரிகையைக் காட்டினான். அதைப் பார்த்தும் அவனது தங்கை ''பத்திரிகையில் எடுத்து வைத்து விட வேண்டியது தானே'' என்று கூறினாள். அதைக் கேட்ட அனைவருமே சிரித்து விட்டோம்.

1. இதில் வரும் உறவு முறைகள் எவை?

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

2. பின்வரும் சொற்களின் ஒத்த கருத்துச் சொற்களை பந்தியிலிருந்து எழுதுக?

   தினம் ..........................................................

   உதயம் ..........................................................

   சிநேகிதன் ..........................................................

   வேகமாக ..........................................................

   புதினப்பத்திரிகை ..........................................................

3. பின்வரும் சொற்களின் எதிர்க் கருத்துச் சொற்களை எழுதுக? .

   நண்பன் ..........................................................

   விரைவாக ..........................................................

   காலை ..........................................................

4. பின்வரும் சொற்களின் எதிர்ப்பாற் சொற்களை எழுதுக? .

   அம்மா ..........................................................

   தங்கை ..........................................................

   நண்பன் ..........................................................

5. மேற்கோட்குறியில் எழுதப்பட்டுள்ள வாக்கியம் ஒன்றை எழுதுக?

   ................................................................................................................

**03. அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு வெற்றிடத்தை நிரப்புக.**

01. பச்சைக் கிளிகள் வானத்தில் ..........................................................................................

(பறந்தண, பறந்தன, பரந்தன)

02. மாணவர்கள் மாடிப்படியிலிருந்து ..........................................................................................

(இறங்கினர், இரங்கினர், இறங்கிணர்)

03. நாயைக் கண்ட முயல் வேகமாக ஓடி ..........................................................................

(ஒளிந்தது, ஒழிந்தது, ஒலிந்தது)

04. வேடன் எய்த ........................................ பட்ட மான் வேதனையால் துடிதுடித்தது.

(பாணம், பானம், பாநம்)

05. மலர்களிலிருந்து நறு ................................................ வீதியது

(மனம், மணம், மநம்)

06. இரவு வாணில் நட்சத்திரங்கள் ..........................................................................................

(ஒழிர்ந்தன, ஒளிர்ந்தன, ஒழிந்தன)

07. சூரியனைச் சுற்றி .................................................... வலம் வருகின்றன

(கோல்கள், கோள்கள் , கோழ்கள் )

08. அதிகாலை வேளை புற்களின் மேல் ............................ த்துளிகள் காணப்பட்டன.

(பனி, பணி)

09. மகாத்மாகாந்தி சமூகப் ............................................................ ஆற்றினார்

(பனி, பணி)

10. நான் நேற்றுப் பாடசாலைக்குச் ...................................................... அளிக்கவில்லை.

(சமூகம், சமுகம்)

11. நாம் சுவாசிப்பதற்கு ........................................ அவசியமாகும்

(வழி, வளி, வலி)

12. பாதையில் சென்ற முதியவர் வைத்தியசாலைக்குச் செலலும் ................................ எது எனக் கேட்டார்?

(வளி, வலி, வழி)

13. காலில் முள் துதிதயமையால் .................................................. ஏற்பட்டது.

(வளி, வலி, வழி)

14. ஆசிரியர் கூறிய ........................................ களை மாணவர்கள் கவனமாகச் செவிமடுத்தனர்

(அரிவுரை , அறிவுரை)

15. கிராம அபிவிருத்திச் சங்கம் பொது மக்களின் எதவியுடன் டெங்கு நுளம்புகளை ............................ ப்பதில் ஈடுபட்டது

(ஒளி, ஒழி, ஒலி)

16. ஔவையார் ........................................ செய்ய விரும்பு என்றார்.

(அறம், அரம்)

திரு. க. சந்திரகுமார் . --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

**04. கீழே சம்பவம் ஒன்றின் முதற் பகுதி தரப்பட்டுள்ளது. அதனை வாசித்து மிகுதிப் பகுதியை நிறைவு செய்க?**

காகம் ஒன்று மரத்தின் மீது அமர்ந்து நீண்ட நேரம் கரைந்து கொண்டிருந்தது. சிறிது நேரம் காகம் கரையும் ஓசை அதிகமாகக் கேட்கவே சிறுவன் வீட்டில் இருந்து வெளியே வந்தான். காகம் கரையும் திசைநோக்கிப் பார்த்தான்..............

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

**05. கீழே தரப்பட்டுள்ள காட்சிப் படத்தைக் கொண்டு நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்கள் எழுதுக?**



1. ......................................................................................................................................

......................................................................................................................................

2. ......................................................................................................................................

......................................................................................................................................

3. ......................................................................................................................................

......................................................................................................................................

- நன்றி -

வீட்டிலிருந்து சுயமாகக் கற்று பயன்பெறுக